நகர் ஊரமைப்புத்துறை,
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் செயல்முறை
ஆணை பிறப்பிப்பவர் – திரு.அ.விஜயன் பி.இ.,

ந.க.எண்.2050/2021/மதி2 நாள். .04.2022
கட்டிட தி.அ.எண்.86 'அ' முதல் 86 'ஈ ' /2022 வரை
உள்ளாட்சியின் பெயர்: மதுரை மாநகராட்சி

பொருள் : அடுக்குமாடி கட்டிடம் –மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – மதுரை உள்ளூர் திட்டக்குழும பகுதி – மதுரை மாவட்டம் – மதுரை வடக்கு வட்டம் – வண்டியூர் பிட் II கிராமம் – சர்வே எண்.121/7A –ல் 1000.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 2595.56 ச.மீ கட்டட பரப்பில் Stilt + 5 தளங்களில் 35 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு கட்டட/ திட்ட அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களால் இசைவளிக்கப்படத்தினை தொடர்ந்து, நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49–ன் கீழ் திட்ட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18778/2021/TCP1, நாள்.18.02.2022.
2) மனுதாரர் திரு.N .R .சிவகுமார்அவர்களின் விண்ணப்பம் நாள்16.06.2021, 29.07.2021 ,22.09.2021, 26.10.2021, 15.11.2021, 24.12.2021, 15.03.2022, 04.04.2022.
3) eDCR scrutiny Report Unique ID SCR–29.03.2021–230170. Application Ref No.202100702032135. Dated. 29.03.2021.
4) அரசாணை எண். (நிலை) எண்.19, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.02.03.2022.
5) அரசாணை எண். (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
6) அரசாணை எண். (நிலை) எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.16.05.2017.
7) அரசாணை எண். 1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.05.01.2021.
8) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
9) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.

10) அரசாணை எண்.18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.02.2019.
11) அரசாணை எண்.54 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.12.03.2020.
12) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7488/2009, பிரிவு2 நாள்.18.04.2009.
13) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ, நாள்.27.08.2012
14) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/பிஏ, நாள்.22.09.2017
15) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/பிபி, நாள்.14.12.2017
16) அரசு கடிதம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சென்னை – 09 அவர்களின் கடிதம் எண்.8446/நவ4(3)/2020–2 நாள்.23.09.2020.
17) நகர் ஊரமைப்பு இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்.7671/2020/T(2) நாள்.25.09.2020.
18) மதுரை உள்ளூர் திட்டக்குழும அதிகார பகிர்வு தீர்மான எண்.130/2020, நாள்.29.09.2020.
19) கோட்டப் பொறியாளர் (நெ.து) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் தற்காலிக தடையின்மைச் சான்று– செ.மு.க.எண். 2870/2021/இ.அ.2, நாள் : 21.12.2021.

-------

<u>உத்திரவு</u>

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், வண்டியூர் பிட் II கிராமம், , சர்வே எண்: 121/7A –4. 1000.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 2595.56 ச.மீ கட்டட பரப்பில் Stilt + 5 தளங்களில் 35 குடியிருப்புகள் கொண்ட கொண்ட உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு பார்வை 1–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் கட்டிட/திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, கட்டுமான பரப்பளவு விபரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

<u>மனையிடத்தின் பரப்பளவு</u>

மனையிடத்தின் பரப்பளவு = 1000.00 ச.மீ

உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்தின் பரப்பு விபரம்

| Sl No. | Building Details | FSI Area Sqm | NON FSI Sq.m | Total Sq.m |
|---|---|---|---|---|
| 1 | Stilt Floor | 24.00 | 501.98 | 525.98 |
| 2 | First Floor | 501.84 | 24.14 | 525.98 |
| 3 | Second Floor | 501.84 | 24.14 | 525.98 |
| 4 | Third Floor | 501.84 | 24.14 | 525.98 |
| 5 | Fourth Floor | 501.84 | 24.14 | 525.98 |
| 6 | Fifth Floor | 501.84 | 24.14 | 525.98 |
| 7 | Head Room | 62.36 | - | 62.36 |
| | TOTAL | 2595.56 | 622.68 | 3218.24 |

FSI Area 2595.56 Sqm

FSI- 2.789

மேற்படி பரப்பளவு கொண்ட உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்க பார்வை 1–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் அமையும் மனையிடத்திற்கு A முதல் D வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.20/2022 என் எண்ணிடப்பட்டு இசைவளிக்கப்படத்தினைத் தொடர்ந்து, , மேற்கண்ட பரப்பளவு கொண்ட உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்பு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49–ன் கீழ் திட்ட அனுமதி எண். 86 அ முதல் 86 ஈ வரை/2022 என எண்ணிட்டு 19.04.2022 முதல் 18.04.2030 எட்டு (8) வருட காலத்திற்கு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

a)சிறப்பு நிபந்தனைகள்

1) It is responsibility of the builders to ensure safe bearing Capacity of the soil and adequacy of the foundations.
2) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் .
3) Planning Permission is issued in accordance with the Provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural Stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. However Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction".

69

4) Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under section 25 of water act 1974 for discharged of Sewage.

5) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்திக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6) The provision in G.O.(Ms)17 Housing Urban development department dated.05.02.2016 relating to installation and use of Solar energy System should be followed.

7) பார்வை 10-ல் கண்ட அரசாணையின்படி கட்டுமானம், Plinth level அடைந்தவுடன் தொடர் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு முன், Construction Continuance Certificate பெறுவதற்கு மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டுமானப் பணிதொடர்ந்திடவேண்டும். மேலும், கட்டுமானப் பணி முழு வடிவில் முடிந்த பின்னர் பணிமுடிவு சான்று (Complete Certificate)பெறப்படவேண்டும். இச்சான்று பெறப்பட்ட பின் தான் வழக்கமான பயன்பாட்டு இணைப்புகள் (Regular Utility Connection) பெற இயலும்.

<u>நிபந்தனைகள்</u>

1) உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படல் வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிக்ள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண்.18 மற்றும் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019, 31.01.2020–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்துதர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1)துறை நாள்.03.11.2014–ன்படி செப்டிக் டேங்கில் 'U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) மேலும் இந்த திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
13) பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)–ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
14) உதவி இயக்குநர், மதுரை உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திட்ட அனுமதி அளித்த பிறகு
    1. திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,
    2. சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைப்பிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

15) The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
16) கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

17) மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்

LIVINGSCAPES PVT. LTD.

18) வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு - வரிவிதிக்கப்பட்டின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியோ பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19) திட்ட அனுமதி வழங்கப்பட்ட செயலாணை மற்றும் வரைபடத்தினை ஊராட்சி இறுதி ஒப்புதலுடன் ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்கள் விண்ணப்பத்தாருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்று அனுப்புமாறு ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

19/4/22

19/04/22

இணைப்பு
செயலாணை கடிதம் – 2 நகல்கள்
முத்திரையிட்ட வரைபடம் – 2 தொகுப்புகள்

1.பெறுநர்
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

2.

| | |
|---|---|
| திரு.N .R .சிவகுமார்<br>கதவுஎண் : 32/19A ,<br>நவரத்தினபுரம் 1வதுதெரு ,<br>காமராஜர் சாலை<br>,மதுரை | உள்ளாட்சி மூலமாக |

ENERGY LIVINGSCAPES PVT. LTD. MADURAI

# உள்ளூர் திட்டக் குழுமம், மதுரை மாநகராட்சி
## திட்ட அனுமதி உத்தரவு
(பிரவு 49, நகர் ஊரமைப்பு சட்டம் 1971)

| | | |
|---|---|---|
| ...டட விண்ணப்ப எண் | : 115/CP/22-23/0005580 | நாள் 05-Aug-2022 |
| ...ஏ எண் | : 115/BPA/2022/01665 | |
| ...டிட அனுமதி எண் | : 115/BL/2022/02382 | |
| திட்ட அனுமதி எண் | : Z2/0642/2022 | |
| ...னுதாரர் பெயர் | : திரு சிவகுமார் ந ர | |
| ...முகவரி | : UDR NO 121/7A,வண்டியூர் மெயின் ரோடு (வார்டு 32), வண்டியூர், ZONE-2 | |
| ...னுவின் நாள் | : 21-Apr-2022 | |
| ...ல / கட்டிட விளக்கம் | : கட்டிடம் /கூடுதல் கட்டிடம் /புதுப்பித்து கட்டிக்கொள்ள | |
| ...தாகுதி | : | பகுதி : |
| ...ரவு/மனை எண் | : - | நகரளவுஎண் : 121/7A |
| ...தெரு | : வண்டியூர் மெயின் ரோடு (வார்டு 32) | |
| ...அபிவிருத்திக் கட்டணம் | : செலான் நெ: 115/CP/22-23/0053392 நாள் : 05-Aug-2022<br>கட்டணம்: 206016.00 | |

முழுமைத்திட்டத்தில் கண்டுள்ள கட்டுபாட்டுக்குட்பட்டு, மேற் காணும் நகரளவு எண் 121/7A, வண்டியூர் மெயின் ரோடு (வார்டு 32), வண்டியூர், ZONE-2 தெருவில் கட்டிடம் கட்டிக் கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைபேரில் 05-Aug-2022 முதல் 04-Aug-2027 வரை ஐந்து ஆண்டு காலத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனை:
அரசாணை எண் 154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2020 அரசால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வு உத்தரவுப்படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி தவறான தகவல்கள் பேரில் வழங்கப்பட்டிருந்தால் அதை தள்ளுபடி செய்யவோ, நிறுத்தி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

பெறுபவர்,

சிவகுமார் ந ர
UDR NO 121/7A,வண்டியூர் மெயின் ரோடு (வார்டு 32), வண்டியூர், ZONE-2

**உதவி செயற்பொறியாளர்**
**(திட்டம்)**
**மதுரை மாநகராட்சி**
**ZONE-2**

This Order is electronically generated and does not require signature

# மதுரை மாநகராட்சி
## கட்டிட அனுமதி உத்தரவு

க.வி எண் 115/CP/22-23/0005580
பி.ப எண் 115/BPA/2022/01665

உ.ஆணை எண் 115/BI/2022/02382

பொருள்: கட்டிட அனுமதி மதுரை மாநகராட்சி, கிராமம் விளாங்குடி பிட்-2, நகரளவு எண் 121/7A, தொகுதி

பகுதி , கதவுஎண் எண் - கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்
பார்வை: சிவகுமார் ந ர என்பவரது 21/04/2022 ம் தேதிய விண்ணப்பம்
மனையின் பரப்பளவு 10019.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | Build up Sqft |
|---|---|---|---|
| 1 | Stilt Floor | RESIDENTIAL | 5661.650 |
| 2 | First Floor | RESIDENTIAL | 5661.650 |
| 3 | Second Floor | RESIDENTIAL | 5661.650 |
| 4 | Third Floor | RESIDENTIAL | 5661.650 |
| 5 | Fourth Floor | RESIDENTIAL | 5661.650 |
| 6 | Fivth Floor | RESIDENTIAL | 5661.650 |
| 7 | Lift and Headroom | RESIDENTIAL | 671.240 |
| | | Total Sqft | 34641.140 |

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Flag Day Collection Fund | |
| 2 | உண்மை நகல் | 200.00 |
| 3 | சேவை வரி | 600.00 |
| 4 | விளம்பரப்பலகை வைப்பு | 1500.00 |
| 5 | Local Planning Authority (LPA) | 1500.00 |
| 6 | பாதாள சாக்கடை முன்வைப்புத் தொகை | 6320.00 |
| 7 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 35000.00 |
| 8 | தொழிலாளர் நல நிதிக் கட்டணம் | 160950.00 |
| 9 | அபிவிருத்திக் கட்டணம் | 162531.00 |
| 10 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 200016.00 |
| 11 | பொருள் சேகரிப்புக் கட்டணம் | 518250.00 |
| | | 518250.00 |
| | Total Amount | 1611417.00 |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 115/CP/22-23/0053392 | 05/08/2022 | 1611417.00 | Online |

| Fees Description 2 | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| | | | |

உத்தரவு

2008-ம் ஆண்டின் மதுரை மாநகராட்சி சட்டம் 275, 276-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம் விளாங்குடி பிட்-2,கதவுஎண் எண் -, வண்டியூர் மெயின் ரோடு (வார்டு 32), வண்டியூர், ZONE-2, தொகுதி , பகுதி நகரளவு எண் 121/7A, உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 05/08/2022 தேதியில் இருந்து 04/08/2027 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

பெறுபவர்,

சிவகுமார் ந ர
UDR NO 121/7A,வண்டியூர் மெயின் ரோடு
(வார்டு 32), வண்டியூர், ZONE-2

உதவி செயற்பொறியாளர் (திட்டம்)
மதுரை மாநகராட்சி
ZONE-2,

79

நகல் இளம் / உதவி பொறியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் வருவாய் உதவியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் . வருவாய் பிரிவு எழுத்தர்.

This Order is electronically generated and does not require signature

81

/ நிபந்தனைகள்

| S.No | Condition Name |
| --- | --- |
| 1 | இந்த அனுமதி 5 வருட காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும். இந்த கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் புதியதாக மனு செய்து உரிமக் கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டும் |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். |
| 3 | ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து எந்தவிதமான மாறுதலும் செய்யக் கூடாது. |
| 4 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்து நகராட்சி/மாநகராட்சி ஆய்வு அலுவலர்கள் கேட்கும் போது காண்பிக்கப்பட வேண்டும். |
| 5 | பொதுத் தெருவை ஒட்டிக் கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5 அடிக்கு மேற்படக் கூடாது. கதவுகள் தெருப் பக்கம் திறக்கப்படக் கூடாது. தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்த வேண்டும் |
| 6 | சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும். |
| 7 | அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. |
| 8 | அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) துறை நாள் 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைக்கப்பட வேண்டும். |
| 9 | கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திற்கு குறையாமல் கைப்பிடிச் சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்பட வேண்டும். |
| 10 | ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீங்கலாக இருக்க வேண்டும். |
| 11 | கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தங்காமல் தடுக்கப்பட வேண்டும். |
| 12 | சமையலறையில் புகையினை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) அமைக்கப்பட வேண்டும். |
| 13 | நகராட்சி/மாநகராட்சி துப்புரவு அலுவலர்/ஆய்வரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் 'பெறுமுன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது. |
| 14 | கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட கட்டிடத்தின் இரண்டு வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். |
| 15 | மழைநீர் சேகரிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண் 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002ன்படி அமைக்கப்பட வேண்டும். |
| 16 | வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம். |
| 17 | கட்டிடம் கட்டப்படும் இடத்தின் முன்புறம் கட்டிட உரிமையாளர் பெயர் கட்டிட அனுமதி எண், அனுமதி வழங்கிய தேதி அனுமதிக்கப்பட்டுள்ள காலம் அனுமதி நீடிப்பு காலம் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் எழுதி வைக்கப்பட வேண்டும். |
| 18 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி சட்டப்பிரிவு 283ன்படி அரையாண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ. 50 வீதம் வசூலிக்கப்படத்தக்கதாகும். |
| 19 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதலாகவும் விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் செய்ய அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதில் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 447ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது மாநகராட்சி சட்டப்பிரிவு 296ன் படி மாநகராட்சி பணியாளர்களால் இடித்து தள்ளப்படும். |
| 21 | ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும். |
| 22 | கட்டிட சம்மந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை தெருவில் போடக்கூடாது. |
| 23 | கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும். |
| 24 | கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேறகொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள். |